*முக்கிய வார்த்தைகள்:*
*குடும்பம்*
*அமைதி / சாந்தி*
*மனப்பான்மை*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**07 நவம்பர் 2025 / 16 ஜமாதில் அவ்வல் ஹிஜிரி 1447**

# குடும்ப உறவில் அமைதியை ஏற்படுத்துவது

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا إِلَىٰ طَرِيقِ الإِيمَانِ، وَمَنَحَ فِي صُدُوْرِنَا السَّكِينَةَ وَالاطْمِئْنَانَ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; எப்போதும் அல்லாஹ்வை நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அடிபணிந்து, அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். நமது வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் அல்லாஹ்வின் போதனைகளைச் செயல்படுத்துங்கள். நமது உண்மையான இறைவனாகிய அல்லாஹ்வுடன் உறவைச் சிறப்பாக ஏற்படுத்திக் கொண்டு, **அமைதியையும் சாந்தி, சமாதானத்தையும்** நாடுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ், நமது அனைத்து விவகாரங்களிலும் அருள்களையும் நன்மைகளையும் வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**
உண்மையில், ஒவ்வொரு நபரும் தனது **குடும்பத்துக்கு** சிறந்த விஷயங்கள் கிடைக்க வேண்டுமென விரும்புபவராக இருக்கின்றார். ஆனால், ஒரு

**குடும்பம்** உண்மையாகவே விரும்புவது என்ன? அன்பு, பொருளாதார உதவிகள், அல்லது வசதியான வீடு ஆகியவற்றையா நமது குடும்பத்தார்கள் விரும்புகிறார்கள்?

ஆம், மேற்கூறப்பட்ட அனைத்து விஷயங்களும் நமது குடும்பத்தார்களுக்கு அவசியம் தான்; எனினும், நமது **குடும்பம்** விரும்பும் ஒரு முக்கியமான மதிப்பீடு உள்ளது; அது ஒவ்வொரு **குடும்பத்தாரின்** உறவில் அடிப்படை அம்சமாக உள்ளது. அதுதான் "சகீனா" என அரபியில் கூறப்படும் **அமைதி** என்பதாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அர்-ரூம்" எனும் அத்தியாயத்தின் 21-வது வசனத்தில் கூறுகிறான்:

وَمِنْ ءَايَٰتِهِۦٓ أَنْ خَلَقَ لَكُم مِّنْ أَنفُسِكُمْ أَزْوَٰجًا لِّتَسْكُنُوٓا۟ إِلَيْهَا
وَجَعَلَ بَيْنَكُم مَّوَدَّةً وَرَحْمَةً إِنَّ فِى ذَٰلِكَ لَءَايَٰتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ ٢١

பொருள்: "*இன்னும், நீங்கள்* ***அமைதி*** *மற்றும் ஆறுதல் பெறுதற்குரிய [உங்கள்] மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காகவே அவன் [அல்லாஹ்] படைத்திருப்பதும், உங்களுக்கிடையே அன்பையும் கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமுதாயத்திற்கு நிச்சயமாக இதில் [பல] அத்தாட்சிகள் இருக்கின்றன*"

அல்லாஹ் மனிதர்களை, அவர்கள் **அமைதியாகவும் சாந்தியுடனும்** வாழ வேண்டுமென்பதற்காக ஆண், பெண் ஜோடிகளாகப் படைத்துள்ளான். கணவன், மனைவிக்கு மத்தியில் ஏற்படும் அன்பானது, அல்லாஹ்வின் நாட்டப்படி அவர்களுக்குப் பிள்ளைப் பாக்கியம் எனும் பரிசுகளைப் பெற்றுத் தருகிறது. அதனைத் தொடர்ந்து உடன் பிறப்புகள் மற்றும் உறவினர்களுக்கு மத்தியில் பாசம் மலர்கிறது; அரவணைப்பும் நெருக்கமும் ஏற்படுகிறது.

இதுதான், மகிழ்ச்சி, **அமைதி** மற்றும் அன்பாகும்; இவற்றை அடையத்தான் ஒவ்வொரு **குடும்பமும்** கனவு காண்கிறது.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**
ஒவ்வொரு **குடும்பத்தின்** உறவும் **அமைதியை** ஏற்படுத்தும் எனக் கூற இயலாது. இது மனித வாழ்க்கையின் யதார்த்த நிலையாகும். சிலவேளைகளில், தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, அன்பும் மரியாதையும் மங்க ஆரம்பித்து விடுகிறது. இது பொருளாதார கஷ்டத்தால் மட்டும் ஏற்படுவதல்ல; மாறாக, ஒருவரிடம் அவருக்கு அறியாமலேயே ஏற்படும் எதிர்மறையான பழக்கங்கள் மற்றும் **மனோபாவத்தின்** காரணமாகவும் அவை ஏற்படும்.

ஒரு **குடும்ப** உறுப்பினர், தான் அவமதிக்கப்படுவதாகவோ, தொடர்ந்து குறை கூறப்படுவதாகவோ, உணர்ச்சி ரீதியில் கஷ்டப்படுத்தப் படுவதாகவோ அல்லது மோசடி செய்யப்படுவதாகவோ உணரும் போது, **குடும்பத்தின் அமைதியும் சாந்தியும்** தவிர்க்க முடியாத வகையில் பிரிந்து விடுகின்றன.

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள், நமது குடும்பத்தாருடன் நாம் அன்புடன் நடந்து கொள்ள வேண்டுமெனவும், அவர்களிடம் நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமெனவும் நமக்கு அடிக்கடி போதித்துள்ளார்கள். **குடும்ப** வாழ்க்கைக்கு மிகச் சிறந்த முன்மாதிரியாக அவர்கள் திகழ்ந்துள்ளார்கள். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

**خَيْرُكُمْ خَيْرُكُمْ لِأَهْلِهِ، وَأَنَا خَيْرُكُمْ لِأَهْلِي**

பொருள்: ”*தனது **குடும்பத்தாருக்கு** எவர் சிறந்தவராக இருக்கின்றாரோ அவர்தான் உங்களில் சிறந்தவர் ஆவார். நான் எனது **குடும்பத்தாருக்குச்***

*சிறந்தவனாக இருக்கின்றேன்.*” [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

தற்போது கூறப்பட்ட, இறைத்தூதருடைய வழிகாட்டுதலின் பிரகாரம், இன்றைய ”குத்பா” பிரசங்கமானது மூன்று சிறந்த செயல்பாடுகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள இருக்கின்றது. அவை மூன்றும் நமது குடும்பத்தார்களுக்கிடையே **அமைதியை** ஏற்படுத்தும் என நம்புகிறோம்:

**முதலாவதாக: நேர்மையாகவும் விவேகத்துடனும் தொடர்பு கொள்வது**

நாம் எதையாவது சொல்வதற்கோ அல்லது செய்வதற்கோ முன்பாக, நமது வார்த்தைகளும் செயல்களும் உடன்பாடானவையா? அல்லது புண்படுத்துபவையா? அவை பலன் தருமா அல்லது தீங்கிழைக்குமா? நாம் பொருத்தமாவும் அறிவுப்பூர்வமாகவும் அணுகுகின்றோமா? எனச் சிந்திக்க வேண்டும்.

சிலவேளைகளில், நமது நோக்கங்கள் சிறந்தவையாக இருக்கலாம்; நாம் மற்றவருக்கு உபதேசம் செய்ய நாடலாம். ஆனால், நமது வார்த்தைகள் மற்றவர்களைப் புண்படுத்துவதாக இருக்கும் நிலையில், நம்மிடம் நல்ல நோக்கம் மட்டும் இருந்து பயனில்லை. நமது மொழி மற்றவர்களின் உள்ளங்களைத் தொடும் வகையில் இருக்க வேண்டுமெனவும், எதிர்மறையான உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் இருக்கக் கூடா தெனவும் இஸ்லாம் நமக்குப் போதித்துள்ளது. நமது குடும்பத்தாருடன் ஆக்கப்பூர்வமாகத் தொடர்பு கொள்வது எப்படி என நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நமது செய்திகளை ஆக்கப்பூர்வமாக எடுத்துரைக்க வேண்டுமே தவிர, அழிவை ஏற்படுத்தும் வகையில் தெரிவிக்கக் கூடாது.

**இரண்டாவதாக: தவறுகளை ஏற்று, அதற்காக மன்னிப்புத் தேடுதல்**

நாம் மனிதர்கள் எனும் ரீதியில், நமது **குடும்பத்தார்களின்** உள்ளங்களைப் புண்படுத்தியிருக்கலாம்; அவர்களின் எதிர்ப்பார்ப்புகளை நாம் நிறைவேற்றாமல் இருந்திருக்கலாம்; தாம் புறக்கணிக்கப்பட்டு விட்டதாக அவர்கள் உணரும் வகையில் அவர்களிடம் நாம் நடந்திருக்கலாம்.

அவர்களில் சிலரிடம், வேதனைமிக்க நினைவுகள் இன்னும் காணப்படலாம்; அவை தீர்க்கப்படாமலிருக்கலாம்.

எனவே, நாம் சுய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்; நாம் கடந்த காலத்தில் யாருக்காவது தவறுகளைச் செய்திருந்தால் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்களின் உணர்வுகளை அக்கறையுடனும் கிருபையுடனும் கேளுங்கள்; அவர்களைச் சிறுமைப்படுத்துவதோ அல்லது அவர்களுக்கு ஏற்பட்ட கடந்த காலக் காயங்களைப் புறக்கணிப்பதோ கூடாது. மன்னிப்புக் கேட்பதற்கு நம்மை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்; காரணம், மன்னிப்புக் கேட்பது நமது ஆற்றலின் அடையாளமே தவிர, பலஹீனத்தின் அடையாளமல்ல. நாம் நமது வாதத்தில் வெற்றி பெற வேண்டுமென்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருந்தால், நமது **குடும்பத்தாருக்கிடையே அமைதியை** இழந்து விடுவோம்.

**மூன்றாவதாக: கோபத்தைக் கட்டுப்படுத்தி, பொறுமையைக் கடைப்பிடித்தல்**

சிலவேளைகளில், **குடும்பத்தார்களுக்கு** மத்தியிலான சில செயல்பாடுகள் கோபத்தைத் தூண்டுவதாகவும், விரக்தியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்துவதாகவும் இருக்கும்; உணர்ச்சி ரீதியிலான துன்பங்களும் ஏற்படலாம். அது போன்ற சூழ்நிலைகளில் உணர்ச்சிவசப்பட்டு எதிர்மறையாகச் செயல்படுவதைத் தவிர்க்க வேண்டும். பெரும்பாலும் அவசரமாகச் செயல்படுவதானது, நாம் வருத்தப்படுவதற்குக் காரணமாகி விடும்.

மிகவும் கவனிக்கத்தக்க விஷயம் யாதெனில், கோபமாகிறது வன்முறையில் ஈடுபடுவதற்குக் காரணமாகி விடும்; வன்முறையில் ஈடுபடுவது எந்தச் சூழ்நிலையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

நமக்குக் கோபம் ஏற்படும் போது, நம்மிடம் **அமைதி** ஏற்படுவதற்காக சில நிமிடங்களை நாம் ஒதுக்க வேண்டும். "நாம் கோபப்படும் போது அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்; தீவிர செயல்களில்

ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்" எனும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வழிகாட்டுதலை நாம் நினைவில் கொள்ள வேண்டும். "அவூதுபில்லாஹ்" எனக் கூறி, ஷைத்தானின் குழப்பங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேட வேண்டும். நமக்கு ஏற்பட்டுள்ள பதற்றத்தைக் குறைப்பதற்கு நமது இடத்தை மாற்ற வேண்டும்; அல்லது நமது உள்ளங்களில் குளிர்ச்சி மீண்டும் ஏற்படுவதற்காக ஒளு செய்து கொள்ளலாம். நிலைமை அமைதியான பின்பு, நமது உறவுகளை மீண்டும் ஏற்படுத்தி, சமரசம் செய்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

**குடும்பத்தில்** ஒவ்வொரு நபரும் **அமைதி** மற்றும் சாந்தி, சமாதானத்தால் நிரப்பப்பட்டவராகவும், அன்பால் அரவணைக்கப்பட்டவராகவும் வாழ்வதற்குத் தகுதி பெற்றுள்ளார். நமக்கும் நமது குடும்பத்தாருக்கும் மத்தியிலான உறவுக்குத் தான் எப்போதும் நாம் அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும். எதிர்மறையான ஆதிக்கங்களிலிருந்தும், குறிப்பாக, நமக்கிடையே ஏற்படும் எதிர்மறையான ஆதிக்கங்களிலிருந்தும் நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நமக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளை நமது பிரியத்திற்குரியவர்களுடன் இணைந்து தீர்ப்பதற்கு அன்றாடம் முயற்சிக்க வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது குடும்பத்தார்களுக்கு **அமைதி**, அன்பு மற்றும் அருள்களை வழங்குவானாக! குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அமைதி, கிருபை மற்றும் அல்லாஹ்வின் வெகுமதிகள் கிடைப்பதற்கான மூலங்களாக நமது குடும்பத்தார்களை ஆக்குவானாக!

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
மாணவர்களுக்குத் தேர்வுகள் நடைபெற்று வரும் இக்காலத்தில், தேர்வுகளை அவர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்வதற்காக, அனைத்து மாணவர்கள் மற்றும் நமது பிள்ளைகளின் உள்ளங்களில் அமைதி வழங்கப்பட வேண்டுமென்றும், அவர்களுக்கு சிந்தனைத் தெளிவுகள் வழங்கப்பட வேண்டுமென்றும் அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்வோமாக! மாணவர்களுக்கு வழிகாட்டி, அவர்களுக்கு உதவி, ஒத்துழைப்பு செய்து வரும் பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் விவேகம், பொறுமை ஆகியவை வழங்கப்பட்டு, அருள் புரியப்படுவார்களாக!

அல்லாஹ், நம்மனைவருக்கும் பயனுள்ள கல்வியறிவைத் தந்தருள்வானாக! நாம் கற்ற கல்வியிலிருந்து பயன் பெறுவதற்கான வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! யா அல்லாஹ்! யா சாமிஃ! யா ஆலிம்! நாங்கள் நிரந்தர வெற்றியை அடைவதற்காக, உண்மையான கல்வியறிவையும் நேர்மையான ஓரிறை நம்பிக்கையையும் எங்களின் உள்ளங்களில் ஏற்படுத்துவாயாக!

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ

ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلاءَ وَالوَبَاءَ وَالزَّلازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.